Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, NOVEMBER 25 2024

செவ்வாய்க்கிழமை நவம்பர் 2 நகரப்பதிப்பு FREE

## உ/த பரீட்சைக்கு எதிராக மனு



தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை நடத்துவதைத் தடுக்கும் இடைக்கால உத்தரவை பிறப்பிக்கக் கோரி மாணவியொருவர் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை, டிசெம்பர் 12ஆம் திகதி ஆராய்வதற்கு உயர் நீதிமன்றம் திங்கட்கிழமை (25) தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2



# இயற்கையின் கோர தாண்டவம்

வங்காள விரிகுடாவில் தற்போது ஏற்பட்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மற்றும் அதன் அடுத்தகட்ட வளர்ச்சிகள் காரணமாக நாட்டின் பல பாகங்களிலும் அனர்த்த நிலைமைகள் ஏற்பட்டுள்ளன.

வடக்கு,கிழக்கு, மலையகம் உள்ளிட்ட நாட்டின் பல பாகங்களிலும் கடுமையான மழை பெய்துகொண்டிருக்கின்றது. இந்த நிலைமை, எதிர்வரும் 28ஆம் திகதி வரையிலும் நீடிக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு, தெற்கு, வடமேல் மற்றும் சப்ரகமுவ ஆகிய மாகாணங்களில், ஏழு மாவட்டங்களில் இந்த அசாதாரண நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. ஒரு சில பிரதேசங்களில், மழையுடன் கடுங்காற்று வீசுகின்றது. தாழ் நில பிரதேசங்கள் வெள்ளக்காடாகக் காட்சியளிக்கின்றன. வடக்கில் சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தில் உள்ளன.

எனினும், விவசாயிகள் முப்படையினர் இணைந்து, மணல் மூடைகளைக் கொண்டு, அணைக்கட்டை பலப்படுத்தியுள்ளனர். எனினும், தற்போது பெய்யும் மழை, அதே வீச்சில் பெய்யுமாயின், ஒரு சில அணைகள் உடைந்துவிடும் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்திலும், சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி மாவட்டத்திலும், வட மாகாணத்தில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும், கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்திலும், தென் மாகாணத்தில் காலி மாவட்டத்திலும் கடுமையான வெள்ளம் பாய்ந்தோடிக்கொண்டிருக்கின்றது.

இந்த வெள்ள அனர்த்தத்தினால், 4,410 குடும்பங்களைச் சேர்ந்த 16,287 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன், 330 குடும்பங்களைச் சேர்ந்த 1,136 பேர், 14 மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## சுஜீவவின் காரை விடுவிக்க உத்தரவு



குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் பொறுப்பேற்கப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுஜீவசேன சிங்கவின் V8 சொகுசுகாரை விடுவிக்குமாறு கோட்டை நீதவான் தனுஜாலக்மாலி திங்கட்கிழமை (25) உத்தரவிட்டுள்ளார்.

100 மில்லியன் ரூபாய் பிணை அடிப்படையில், குறித்த சொகுசு வாகனத்தை மீள ஒப்படைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுஜீவசேனசிங்கவுக்குச் சொந்தமான சொகுசு வாகனம் தொடர்பில்

தொடர்ச்சி P2



## கரோலினா விபத்தில் நால்வர் படுகாயம்

செ.யோகேசன், கௌசல்யா, செ.தி.பெருமாள்

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியில் வட்டவளை, கரோலினா தோட்ட பகுதியில் திங்கட்கிழமை (25) இடம்பெற்ற விபத்தில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

அதிவேகமாகப் பயணித்த தனியார் பேருந்து ஒன்று, எதிர்த்திசையில் வந்த இ.போ.ச. பேருந்துடன் மோதியதில் தனியார் பேருந்தின் பின் பகுதி இரண்டாக உடைந்துள்ளதாக வட்டவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொடர்ச்சி P2



## EPDPஇல் இருந்து திலீபன் வெளியேறினார்

க.அகரன்

வன்னி மாவட்டத்தின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வவுனியா நிர்வாக செயலாளருமான குலசிங்கம் திலீபன் கட்சியில் இருந்தும் அதன் அனைத்து பொறுப்புக்களில் இருந்தும் வெளியேறுவதாக திங்கட்கிழமை (25) அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அமைச்சருக்கு முதல் அழைப்பே திகைப்பானது



கைத்தொழில் அமைச்சின் பணியை பொறுப்பேற்றவுடன் வந்த முதல் தொலைபேசி அழைப்பு, தொலைபேசிக்கான நிலுவைத் தொகையான 24,220 ரூபாவை செலுத்துமாறு அறிவிக்கப்பட்டதாகக் கைத்தொழில் மற்றும் தொழில் முனைவோர் அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## வெசாகில் வன்புணர்வு: நபருக்கு கடூழிய சிறை

11 வயத சிறுமியை கடுமையாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில், 50 வயதான ஒரு பிள்ளையின் தந்தைக்கு, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க, 8 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது திங்கட்கிழமை (25) தீர்ப்பளித்துள்ளார்.

வெசாக் காலத்தில் வெசாக் தோரணங்களை பார்க்கப் பெற்றோருடன் வந்த 11 வயது சிறுமிக்கு வெசாக் கூடு அமைத்துத் தருவதாகக் கூறிய, அவரை அந்த தோரணங்கள் இருந்த கூடாரத்துக்குள் அழைத்துச் சென்று பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாகச் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த 2015ஆம் ஆண்டு மே மாதம் ஒரு நாள், கொழும்பில் 11 வயதான சிறுமியைக் கடுமையாக பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியதாக சட்ட மா அதிபர் பிரதிவாதி மீது குற்றஞ்சாட்டினார்.

தொடர்ச்சி P2

## மு.கா.விலிருந்து ஹரீஸ் இடைநிறுத்தம்



எஸ்.அஷ்ரப்கான்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர் பீடத்திலிருந்து முன்னாள் எம்.பி. ஹரீஸ் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

கட்சியின் செயலாளர் நாயகம் நிஸாம் காரியப்பர் இது தொடர்பான கடிதத்தை ஹரீஸுக்கு அனுப்பியுள்ளதுடன்,

தொடர்ச்சி P2

## "வினைத்திறனாக முன்னெடுக்கவும்"



திறந்த பாராளுமன்ற எண்ணக்கருவை வலுப்படுத்தி, பொறுப்புக்கூறலுடன் மக்கள் பிரதிநிதித்துவ பணியை வினைத்திறனாக முன்னெடுக்க வேண்டும். திறந்த பாராளுமன்றம் எண்ணக்கருவை வலுப்படுத்திக் கொண்டு, மக்கள் பிரதிநிதித்துவத்தின் மூலம் ஆற்றப்படும் சேவைகள் வெளிப்படைத்தன்மையுடன் அமைந்து காணப்பட வேண்டும்.

தொடர்ச்சி P2



## "ஒழுங்கற்ற மனிதர்களால் இயற்கை பேரழிவுகள்"

அனர்த்த முகாமைத்துவத்தில் நிறுவன கட்டமைப்புகளை வலுப்படுத்துவது மட்டும் போதாது எனவும் தீர்வுகளை அடி மட்டத்திற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப் பட வேண்டும் எனவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "கடலுக்குச் செல்லாதீர்கள்"

எஸ்.ஆர்.லெம்பேட்



குறைந்த தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் ஏற்படவுள்ள அனர்த்தத்தை தடுக்க முப்படையினர், பொலிஸார் மற்றும் சகல திணைக்களங்களின்

தொடர்ச்சி P2



## குவைத்திலிருந்து 32 கைதிகள் வெலிக்கடைக்கு திரும்பினர்

டி.கே.பி.கபில

போதைப்பொருள் குற்றச்சாட்டில் குவைட் மத்திய சிறைச்சாலையில். சிறைத்தண்டனை அனுபவித்து வரும் இலங்கை கைதிகள் 104 பேரில் 32 பேர், வரலாற்றில் முதல் தடவையாக குவைத்தில் இருந்து விசேட விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை திங்கட்கிழமை (25) மதியம் வந்தடைந்தனர்.

குவைத் அரசுக்கும் இலங்கைக்கும் இடையில் 2007ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ், அந்நாட்டின் அரசாங்கத்தால்

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# உ/த பரீட்சைக்கு எதிராக மனு

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, முர்து பெர்னாண்டோ மற்றும் பிரியந்த பெர்ணாந்து ஆகியோர் அடங்கிய அமர்வு முன் இந்த மனு பரிசீலிக்கப்பட்டுள்ளது.

இந்த முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவி ஹன்சனி அழககோன் தாக்கல் செய்த மனுவில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்வி அமைச்சர் திருமதி ஹரிணி அமரசூரிய உள்ளிட்டோர் பிரதிவாதிகளாக குறிப்பிட்டுள்ளனர்.

கல்விப் பொதுத் தராதர உயர்தர கல்விக் காலம், தொடர்பிலான 39/2023 சுற்றறிக்கையில் உயர் தரப் படிப்புக் காலம் 107 கல்வி நாட்களை நிறைவு செய்ய வேண்டும் என தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய மனுதாரரான மாணவி, இந்தக் கல்விக் காலத்துக்கு முன்னதாக உயர்தரப் பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அம்மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், உயர்தரப் பரீட்சை நடாத்தப்படுகின்றமையால், ஏறக்குறைய மூன்று இலட்சம் மாணவர்கள் பெரும் அநீதிக்கு ஆளாகியுள்ளதாகவும், குறித்த பாடத்திட்டத்தைத் திட்டமிட்டபடி பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் மனுதாரர் மேலும் தெரிவித்துள்ளார்.

தனது மனுவை பரிசீலனைக்கு அனுமதிக்குமாறும், உயர்தரப் பரீட்சையை இடைநிறுத்தி இடைக்கால உத்தரவு பிறப்பிக்குமாறும், உரிய அட்டவணையை இரத்துச் செய்யுமாறும் மனுதாரரான அந்த மாணவி கோரியுள்ளார்.

இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலத் விக்னேஸ்வரன், பரீட்சைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதால், மனுவைத் தொடர்ந்தும் முன்னெடுத்த முடியாது எனத் தெரிவித்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி திரந்த வளலியெத்த, உண்மைகளை முன்வைத்து, மனுவைத் திருத்துவதற்கு அனுமதி வழங்குமாறு நீதிமன்றில் கோரினார்.

மனுதாரரின் கோரிக்கை அனுமதிக்கப்பட்டால், இது தொடர்பாக ஆட்சேபனைகளைத் தாக்கல் செய்ய தங்களுக்கும் அனுமதிக்க வேண்டும் என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நிர்மலத் விக்னேஸ்வரன் கேட்டுக் கொண்டார்.

உண்மைகளைப் பரிசீலித்த நீதிமன்றம், திருத்த மனுவை ஏற்றுக்கொண்டதுடன், மனு தொடர்பான உண்மைகளை சரிபார்க்க டிசெம்பர் 12ஆம் திகதிக்கு அழைப்பு விடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# கரோலினா விபத்தில் நால்வர் படுகாயம்

ஹட்டன் இ.போ.ச. டிப்போவிற்கு சொந்தமான, கினிகத்தேனையிலிருந்து ஹட்டன் நோக்கிச் சென்ற பேருந்தும், ஹட்டனிலிருந்து கண்டி நோக்கிச் சென்ற தனியார் பஸ்ஸூம் மோதி இவ்விபத்து ஏற்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த நால்வரின் நிலைமை கவலைக்கிடமாக இல்லை எனவும் நிலவும் மோசமான வானிலையுடன் ஹட்டன்-கொழும்பு பிரதான வீதி மற்றும் ஏனைய சில வீதிகள் வழுக்கும் தன்மையுடன் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் தனியார் பேருந்துக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதுடன், விபத்து தொடர்பில் வட்டவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# சுஜீவவின் காரை விடுவிக்க உத்தரவு

குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு கடந்த முதலாம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொ ள்ளப்பட்டபோது, இந்த சொகுசு வாகனம் நீதிமன்ற உத்தரவின் கீழ் குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் கைப்பற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மு.கா.விலிருந்து ஹரீஸ் இடைநிறுத்தம்

கட்சியை, கட்சித்தலைவரைப் பொதுவெளியில் விமர்சித்த காரணத்தினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்த செயற்பாடு தொடர்பில் நியாயப்படுத்தும் காரணங்கள் இருப்பின் அதனை விளக்குமாறும் அந்த கடிதத்தில் ஊடாக கோரப்பட்டுள்ளது.

# வெசாகில் வன்புணர்வு: நபருக்கு கடூழிய சிறை

இது தொடர்பான நீண்ட விசாரணையின் முடிவில், குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ளதாக முடிவு செய்த நீதிபதி, குற்றவாளிக்கு 8 வருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்துள்ளார்.

அத்துடன், 10 ஆயிரம் ரூபாய் அபராதத்தையும் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

மேலும், பாதிக்கப்பட்ட சிறுமிக்கு, 2 இலட்சம் ரூபாய் நட்டஈட்டை வழங்குமாறும் அவர் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

நட்டஈடு மற்றும் அபராதத்தைச் செலுத்தாமல் விட்டால், பிரதிவாதிக்கு மேலும் 18 மாதங்கள் சிறைத்தண்டனை விதித்த நீதிபதி, தண்டனைகளை தனித்தனியாக அனுபவிக்க உத்தரவிட்டுள்ளார்.

# குவைத்திலிருந்து 32 கைதிகள்...

இவர்கள், இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

குவைத் நாட்டில், ஆபத்தான போதைப்பொருள் பாவனை, வர்த்தகம் மற்றும் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபட்டதாக அந்நாட்டு பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு குற்றவாளிகளாகக் காணப்பட்ட இலங்கையர்கள் அடங்கிய ஒரு குழுவே நாட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

குவைத் நாட்டிற்கான இலங்கைத் தூதுவர் காண்டீபன் பாலசுப்ரமணியம், கைதிகள் சிலரை இலங்கைக்கு அனுப்ப கடந்த மார்ச் மாதம் முதல் முயற்சித்து வந்தார். பின்னர், குவைத் அரசர் மற்றும் உள்துறை அமைச்சர் ஆகியோருடன் இலங்கைத் தூதுவரின் நெருங்கிய உறவுகளைப் பயன்படுத்தி, அவர்களுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தி, குவைத் விமானப்படையின் மிகப்பெரிய சி-17 விமானத்தின் மூலம் அவர்கள் அழைத்துவரப்பட்டனர்.

இந்த இலங்கைக் கைதிகளை இலங்கையிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ் இந்த நாட்டில் சிறைத் தண்டனை அனுபவித்து வரும் குவைத் கைதிகள் எவரும் இல்லை என்பது விசேட அம்சமாகும்.

குவைத்துக்கான இலங்கைத் தூதுவர் குவைத் நகர விமானப்படைத் தளத்திற்கு திங்கட்கிழமை (25) சென்று இலங்கைக் கைதிகளை ஏற்றிச் செல்லும் சிறப்பு விமானம் புறப்படுவதை அவதானித்ததுடன், இந்த விமானம் உள்ளூர் காலை 07.06 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை நோக்கிப் புறப்பட்டது.

இந்த விமானத்தில் கைவிலங்குகளுடன் இலங்கை கைதிகள் வந்துள்ளனர், அவர்களுடன் குவைத் அரசின் பாதுகாப்பு அதிகாரிகள், உள்துறை அமைச்சக அதிகாரிகள் மற்றும் மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் அடங்கிய குழுவும் இருந்தனர்.

குவைத் நாட்டிலிருந்து புறப்பட்ட குவைத் விமானப்படைக்கு சொந்தமான KAF-3223 விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தை திங்கட்கிழமை (25) பிற்பகல் 02.30 மணியளவில் வந்தடைந்தது.

இலங்கை சிறைச்சாலைகள் திணைக்கள அதிகாரிகள் குழு ஒன்று பேருந்துகளுடன் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. கைதிகள் வந்து இந்த கைதிகளை வெலிக்கடை சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

இந்த குவைத் அதிகாரிகள் குழுவுடன் இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து குவைத் நோக்கி, செவ்வாய்க்கிழமை (26) புறப்பட உள்ளது.

# “ஒழுங்கற்ற மனிதர்களால் இயற்கை பேரழிவுகள்”

உள்ளூராட்சி நிறுவனங்களைப் பலப்படுத்தி அச்சுறுத்தல் உள்ள பிரதேசங்களில் ஏற்படும் அனர்த்தங்களைத் தடுப்பதற்கு புதிய தீர்வுகள் வழங்க வேண்டுமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர பதவியேற்பு நிகழ்வில் திங்கட்கிழமை (25) இணைந்து கொண்ட போதே ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டே அனர்த்த முகாமைத்துவ சட்ட முறைமைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அந்த சட்டங்களை உரிய முறையில் நடைமுறைப்படுத்துவது அதிகாரிகளின் பொறுப்பாகும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

அவ்வாறு பணியாற்றும் எந்தவொரு அதிகாரிக்காகவும் முன்னிற்பேன் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துவதற்கான முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறும் அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவத்திற்காக அரசாங்கம் அதிகளவு செலவிடுவதாகவும், சட்டங்களைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதன் மூலம் அந்த செலவைக் குறைக்க முடியும் எனவும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வைஸ் எயார் மார்ஷல் (ஓய்வு பெற்ற) சம்பத் துய்யகொந்தா, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ரவி செனவிரத்ன, பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவப்படைத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளனர்.

# அமைச்சருக்கு முதல் அழைப்பே திகைப்பானது

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அமைச்சர் இந்த விடயத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

முன்னாள் அமைச்சர்களின் தன்னிச்சையான செயற்பாடுகளினால் அரச நிறுவனங்கள் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளதாக அதன்போது அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, “நான் எனது அமைச்சுக்குச் சென்றபோது, அமைச்சருக்கு வழங்கப்பட்ட தொலைபேசியில் இருந்து எனக்கு முதல் தொலைபேசி வந்தது. என்னை வாழ்த்த வேறு யாராவது அழைப்பை ஏற்படுத்தியிருக்கலாம் என நினைத்தேன்.

ஆனால், தொலைபேசி நிறுவனம் ஒன்றின் ஊழியப் பெண்ணொருவர், 24,220 ரூபாய் தொலைபேசி கட்டணம் நிலுவையில் உள்ளதாகவும் கட்டாவிட்டால் இணைப்பு துண்டிக்கப்படும் என்றும் தெரிவித்ததாக கூறியுள்ளார்.

# EPDPஇல் இருந்து திலீபன் வெளியேறினார்

இது தொடர்பாக அவர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஆரம்பத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் (தமிழரசுக் கட்சியில்) ஆரம்பித்த எனது அரசியல் பயணம்,

பின்பு, 2013ஆம் ஆண்டிலிருந்து ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (ஈ.பி.டி.பி.) உடன் இணைந்து கட்சியின் வவுனியா மாவட்ட நிர்வாகச் செயலாளராகப் பொறுப்பேற்று மக்கள் பணியாற்றினேன். மேலும், 2020இல் பாராளுமன்ற உறுப்பினராகவும் தெரிவாகினேன். தற்போது நடைபெற்ற 2024 பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு கணிசமான வாக்குகளே கிடைக்கப்பெற்றன.

இதுவரை காலமும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் பயணித்து மக்கள் சேவையாற்றினேன். சில விடயங்கள் காரணமாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியில் இருந்து விலகுகிறேன். இது தொடர்பான கடிதத்தினை, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கௌரவ டக்ளஸ் தேவானந்தாவிற்கு பதிவுத் தபாலில் அனுப்பியுள்ளேன்.

இக் கட்சியில் இருந்து நான் வெளியேறுவதற்கு, கட்சியோ அல்லது கட்சியின் தலைமையோ காரணமில்லை, எனது தனிப்பட்ட முடிவு என்பதைத் தெரிவித்துள்ளேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “வினைத்திறனாக முன்னெடுக்கவும்”

அத்துடன், குடிமக்களுக்கு மிக நெருக்கமான வினை திறனான சேவையை வழங்க வேண்டும். நவீனத் தொழில்நுட்பம் புதிய வடிவமைப்புகளை உருவாக்கும் இந்த காலகட்டத்தில், தொடர்ந்து புதியன புகுந்து திறந்த பாராளுமன்றம் என்ற எண்ணக்கரு முன்னோக்கிக் கொண்டு செல்லப்பட வேண்டும். இதன் மூலம் மக்கள் பிரதிநிதிகள் பெரும் பங்காற்ற முடியும். கேள்விகளை முன்வைப்பது உள்ளிட்ட பல்வேறு முறைகள் மூலம் ஜனநாயகத்தை பாதுகாக்க சந்தர்ப்பம் காணப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

பாராளுமன்ற தெரிவுக் குழுக்கள், துறைசார் மேற்பார்வை குழுக்கள் ஊடாக பெரும் பணியை ஆற்ற முடியும். கொள்கை வகுப்பாக்கத்துக்கு முக்கிய பங்காற்ற முடியும். பொறுப்புக்கூறல் மற்றும் பொறுப்புணர்ச்சியுடன் மக்கள் பிரதிநிதித்துவத்தை வினை திறனான முறையில் முன்னெடுத்துச் செல்லலாம். இது தொடர்பில் கவனம் செலுத்துமாறும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டுள்ளார்.

10ஆவது பாராளுமன்றத்துக்குத் தெரிவாகியுள்ள புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு திங்கட்கிழமை (25) பாராளுமன்ற கட்டிடத் தொகுதியில் ஆரம்பமானது. இதன் ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகப் பாராளுமன்றத்தில் பணியாற்றிய தனது அனுபவத்தை புதிய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

அதில், ஜனநாயக கட்டமைப்பில் நிறைவேற்றுத்துறை, சட்டமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவை ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் 3 தூண்களாக அமைந்து காணப்படுகின்றன. சட்டமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள், சட்டமியற்றும் முறை மூலம் நாட்டின் முன்னேற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் முக்கிய பங்காற்றுகின்றனர்.

பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் கூறியது போல, பிரிட்டிஷ் பாராளுமன்றம் ஜனநாயகத்தின் புனித ஸ்தலமாகும், ஆட்சியாளரையும் ஆளப்படுபவர்களையும் இணைக்கும் முக்கிய புள்ளியாகும். பிரதமர் ஜவஹர்லால் நேரு கூறியது போல் பாராளுமன்றம் வெறுமனே சட்டங்களை இயற்றும் ஒரு நிறுவனம் மட்டுமல்ல, மக்களின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் பாதுகாக்கும் மிக முக்கியமான இடமாகும்.

பாராளுமன்றத்தில் தமது பொறுப்புக்கள், கடமைகள் மற்றும் செயல்முறை குறித்த தேறிய அறிவைப் பெற *Erskine May* மற்றும் *Kaul and Shakdher* எனும் இரண்டு புத்தகங்கள் காணப்படுகின்றன. எனவே இதன் பிரதிகளை அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க வேண்டும். இரண்டு புத்தகங்களையும் கவனமாகக் கற்றறிந்து, பாராளுமன்றக் குழுக்களின் செயல்பாட்டையும், மக்கள் பிரதிநிதித்துவ செயல்முறையையும் வலுப்படுத்தும் புதிய பயணத்தைப் பொறுப்புடன் ஆரம்பித்து, மக்களுக்கு சிறந்து பணியாற்றத் தனது வாழ்த்துக்களையும் இதன்போது தெரிவித்தார்.

# “கடலுக்குச் செல்லாதீர்கள்”

அதிகாரிகள் தயார் நிலையில் உள்ளதாகவும், மன்னார் மாவட்டத்தில் இருந்து மறு அறிவித்தல் வரை கடற் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர்.க.கனகேஸ்வரன் மீனவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது குறைந்த தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்டமும் பாதிக்கப்படும் நிலை ஏற்படவுள்ள காரணத்தினால் மாவட்டத்தில் உள்ள அனைத்து திணைக்களங்களின் அதிகாரிகளையும் திங்கட்கிழமை (25) மதியம் அழைத்துக் குறைந்த தாழமுக்கம் நிலையினை எவ்வாறு எதிர்கொள்வது தொடர்பாகவும், கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, கருத்து தெரிவிக்கையிலேயே அரசாங்க அதிபர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் மாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கடும் மழை காரணமாக மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகளவான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் நகரப் பிரதேச செயலாளர் பிரிவில் 43 கிராமங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. 12 ஆயிரத்து 463 குடும்பங்களைச் சேர்ந்த 43 ஆயிரத்து 629 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் 3 கிராம அலுவலர் பிரிவுகளிலும் 16 குடும்பங்களைச் சேர்ந்த 56 நபர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது வரை மன்னார் மாவட்டத்தில் 14 தற்காலிக நிலையங்கள் அமைக்கப்பட்டு 367 குடும்பங்களைச் சேர்ந்த 1,248 நபர்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உணவுகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும், மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் 16 இற்கும் மேற்பட்ட ஜே.சி.பி. இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு வெள்ளம் தேங்கியுள்ள பகுதியிலிருந்து வெள்ள நீரை வெளியேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

குறிப்பிட்ட நிலையிலிருந்து பாதிக்கப்பட்ட மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்றுவது,தற்போது இடம்பெற்று வரும் உயர் தர பரிச்சைக்குத் தோற்றுகின்ற மாணவர்களில் வெள்ளப் பாதிப்புகளுக்கு உள்ளாகும் மாணவர்களை எவ்வாறு பாதுகாப்பான முறையில் பரீட்சைக்குத் தோற்ற நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்தும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள குறைந்த தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்ட மீனவர்களை,கடல் தொழிலுக்குச் செல்ல வேண்டாம் என்று அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. குறித்த குறைந்த தாழமுக்கம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் 400 மி.மீ. மழை வீழ்ச்சி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது மன்னார் மாவட்டத்தில் சராசரியாகக் கிடைக்கின்ற மழைவீழ்ச்சியில் மூன்றிலொரு பங்கு மழை வீழ்ச்சி இரண்டு நாட்களின் கிடைக்கும்போது, அது மன்னார் மாவட்டத்தில் பாரிய அனர்த்தத்தை ஏற்படுத்தும்.

# "பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்க வேண்டாம்"



நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை(25) முதல் நடைபெற்றுவரும் 2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொது தராதர உயர்தரப் பரீட்சை தினங்களில் மாணவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் எந்தவொரு செயற்பாடுகளையும் செய்ய வேண்டாம் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

திங்கட்கிழமை(25) முதல் டிசெம்பர் 20ஆம் திகதி வரை நடைபெறும் உயர்தரப் பரீட்சை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், இதனை மக்கள் விதியாக இல்லாமல் உணர்வுடன் செய்ய வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, "இந்தக் பிள்ளைகளுக்கு ஏதேனும் பிரச்சினை இருந்தால், அதைத் தீர்க்க உதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பிள்ளைகளும் நல்ல சூழ்நிலையில் இந்த பரீட்சைக்கு தோற்ற வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

தேவையான அனைத்து வசதிகளையும் செய்து தர வேண்டும். அந்த வகையில் எனக்கு அனைவரின் ஆதரவும் தேவை. இந்தச் சமயங்களில் உங்கள் ஆதரவை அந்தக் பிள்ளைகளுக்கு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், பரீட்சை நேரத்தில் இவர்களுக்கு இடையூறு விளைவிக்கும் எதையும் செய்யாதீர்கள். இது தொடர்பாக, பொலிஸாருடன் பேசி, தேவையான திட்டத்தை தயாரித்துள்ளோம்.

உயர்தரப் பரீட்சை மாணவர்களின் வாழ்க்கையில் முக்கியமான பரீட்சை என்பதால், டிசெம்பர் 20ஆம் திகதி வரை அந்தக் மாணவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்.

ஏதேனும் அவசர நிலை ஏற்பட்டால், அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் அவசர தொலைபேசி இலக்கமான 177 என்ற இலக்கத்திற்கு அழைப்பதோடு, பரீட்சை திணைக்களத்தின் 1911 என்ற இலக்கத்திற்கு அழைத்து பிரச்சினைகளை தீர்த்துக்கொள்ள முடியும்.

இதேவேளை, பரீட்சை தொடர்பான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் பாடசாலை பரீட்சை அமைப்புக் கிளையின் 0112 785 922/ 0112 784 537 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைக்க முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் சுமார் 333,185 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## அம்பருடன் இருவர் கைது

சட்டவிரோதமாக திமிங்கல வாந்தியை வைத்திருந்த இரண்டு நபர்கள் அனுராதபுரத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து ஒரு கிலோ கிராம் அம்பர்கிரிஸ் கண்டுபிடிக்கப்பட்டதுடன், இது திமிங்கலங்களிலிருந்து பெறப்பட்ட மிகவும் அரிதான மற்றும் விலையுயர்ந்த பொருளாகும். இது சுமார் 8 மில்லியன் ரூபாய் பெறுமதிமிக்கதாகும்.

இராணுவத்தினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து நொச்சியாகம பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்காலை பிரதேசத்தில் வசிக்கும் 36 வயதுடைய நபரும், கொக்காவெவ, கலென்பிந்துனுவெவ பிரதேசத்தில் வசிக்கும் 24 வயதுடைய ஒருவருமே கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நொச்சியாகம பொலிஸார் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## பெற்றோர் மறுத்ததால் தோழியுடன் குதித்த மாணவி

விக்டோரியா நீர்த்தேக்கத்தில் குதித்து பாடசாலை மாணவியொருவர் உயிரை மாய்த்துக்கொண்டுள்ள சம்பவம் சனிக்கிழமை ( 23) பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

கண்டி - தெல்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 17 வயதுடைய பாடசாலை மாணவி ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி தனது தோழியுடன் விக்டோரியா நீர்த்தேக்கத்தில் குதித்து உயிரை மாய்த்துக்கொள்ள முயன்றுள்ளதுடன், தோழி காப்பாற்றப்பட்டுக் கரைக்குக் கொண்டுவரப்பட்ட நிலையில், மற்றைய மாணவி நீரில் காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து, காணாமல்போன பாடசாலை மாணவியின் சடலம் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. காப்பாற்றப்பட்ட தோழி சிகிச்சைக்காக தெல்தெனிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மாணவியின் காதல் உறவுக்குப் பெற்றோர் மறுப்பு தெரிவித்ததனால், மனதளவில் பாதிக்கப்பட்டிருந்ததாலேயே மாணவி உயிரை மாய்த்துக்கொண்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தெல்தெனிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## 13 மோட்டார் சைக்கிள்கள் மீட்பு; ஒருவர் கைது



அனுராதபுரம், மிஹிந்தலை, கலென்பிந்துனுவெவ, எப்பாவல மற்றும் தம்புத்தேகம உள்ளிட்ட பல பிரதேசங்களில் பாரியளவிலான மோட்டார் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கனேவல்பொல, கலபிடகல பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட பிரதேசங்களில் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் இடம்பெற்ற திருட்டு சம்பவங்கள் தொடர்பில் மேற்கொண்ட நீண்ட விசாரணையின் பின்னரே சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் நடத்திய விசாரணையில், ஹிங்குராங்கொடை, பொலன்னறுவை போன்ற பகுதிகளில் உள்ள மோட்டார் சைக்கிள் கடைகளுக்கு மற்றும் வீடுகளுக்கு விற்பனை செய்த நிலையில், 13 மோட்டார் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் கடிதம்

மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபைக்குட்பட்ட அனைத்து தனியார் பஸ் உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கை கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

அனைத்து நகரத் தனியார் பஸ் தரிப்பிட காரியாலய பொறுப்பதிகாரியினூடாக விநியோகிக்கப்பட்டுள்ள இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

மத்திய மாகாணத்தில் சிறப்பான சேவையை முன்னெடுத்து வரும் தனியார் பஸ் உரிமையாளர்களுக்குத் தனது நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, உங்களது சேவைக்கு இடையூறாக பஸ் தரிப்பிட காரியாலய உத்தியோகத்தர்கள் நேரசூசி பதிவு செய்யும் போதும், தற்காலிக சேவை அனுமதிப் பத்திரம் பெறும் போதும் லஞ்சம் வாங்குவதாக சமூக ஊடகங்களினூடாகவும் பொது மக்களின் ஊடாகவும் முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

எனவே, புதிய அரசின் இலஞ்ச ஊழல் ஒழிப்பு வேலைத்திட்டத்திற்கு பஸ் உரிமையாளர்கள் சாரதிகள் நடத்துநர்களின் ஒத்துழைப்பினையும் எதிர்பார்க்கிறோம்.

எனவே, இலஞ்சம் வாங்குவதும் கொடுப்பதும் குற்றம் என்ற வகையில், தனியார் பஸ் தரிப்பிட காரியாலய உத்தியோகஸ்தர்களினால் இலஞ்சம் கேட்கப்படுமானால் உடனடியாக எமக்கு அறியத்தருமாறும் கேட்டுக்கொள்வதோடு, இனி வரும் காலங்களில் இவ்வாறு இலஞ்சம் வழங்குவோரின் போக்குவரத்து சேவைக்கான உரிமம் இரத்து செய்யப்படும் என மத்திய மாகாண பயணிகள் போக்குவரத்து சேவை அதிகார சபை தலைவரின் கையொப்பமிட்டு குறிப்பிடப்பட்டுள்ளது.

## மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு

அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டம் மூதூர் கிழக்கு- சம்பூரில் மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை சம்பூர் ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழுவினால் சம்பூர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், 500க்கும் மேற்பட்ட மாவீரர்களது பெற்றோர் மற்றும் உற்றார் கலந்து கொண்டதுடன் மாவீரரது குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தென்னம் பிள்ளைகளைத் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேலு சண்முகம் குகதாசன் அவர்கள் வழங்கி வைத்தார்.







## இளைஞன் உயிர் மாய்ப்பு

எஸ்.தில்லைநாதன்

யாழ்ப்பாணம், வடக்கு, நீர்வேலி பகுதியைச் சேர்ந்த சோதிலிங்கம் மிதுர்சன் (வயது 28) என்ற இளைஞன் தவறான முடிவெடுத்து கிணற்றில் குதித்து உயிரை மாய்த்துள்ள சம்பவம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த இளைஞனைக் காணவில்லை என உறவினர்கள் தேடிய வேளை அவரது சடலம் கிணற்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## வேருடன் சாய்ந்த மரத்தால் வாகனத்திற்கு சேதம்

மு.தமிழ்ச்செல்வன்

நாட்டில் தற்போது நிலவி வரும் சீரற்ற காலநிலை காரணமாக தர்மபுரம் - சுண்டிக்குளம் பகுதியில் மரம் ஒன்று, வேருடன் சாய்ந்ததில் வாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது.

பரந்தன் முல்லைத்தீவு A-35 வீதியின் சுண்டிக்குளம் சந்தியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனத்தின் மீது மரம் வேருடன் சாய்ந்ததில் வாகனம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது மின் இணைப்புக்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாகச் சிறிது நேரம் போக்குவரத்து தடைப்பட்டது. இதனையடுத்து, போக்குவரத்து பொலிஸார் மற்றும் அப்பகுதி இளைஞர்கள் இணைந்து குறித்த மரத்தை அகற்றி நிலைமையை வழமைக்குக் கொண்டுவந்தனர்.









## வெள்ளத்தில் தத்தளித்த கிழக்கு

கடந்த இரண்டு நாட்களாகத் தொடர்ச்சியாகப் பெய்து வரும் அடை மழை காரணமாக இலங்கையின் பல பிரதேசங்களின் மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களில் தாழ்ந்த பகுதிகள், வீதிகள் மற்றும் வீடுகள் நீரில் மூழ்கி வெள்ள பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

- தமிழ்மிரர் நிருபர்கள்













# மறுமலர்ச்சி யுகத்தில் உருவான புதிய அரசியல் கலாசாரம்

கடந்த ஜனாதிபதித் தேர்தல், அதற்குப் பின்னரான பொதுத் தேர்தலில், தேசிய மக்கள் சக்தியின் வெற்றியைப் பலரும் ஜீரணித்துக்கொள்ள முடியாதவர்களாகவே இருக்கின்றனர். தனி ஒரு கட்சியினால் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியமைக்க முடியாது என்பதே கடந்தகால வாதமாக இருந்தது. எனினும், ஜனாதிபதி அனுரகுமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி, அந்த கூற்றை சுக்கு நூறாக்கி விட்டது.

நாட்டில் ஏற்பட்ட இந்த அரசியல் மாற்றத்திற்கு சட்டத்தின் ஆட்சியின் சரிவு முன்னணியில் இருந்தது. அதனைதான், பாராளுமன்றத்தை கடந்த 21ஆம் திகதியன்று ஆரம்பித்து தனது அக்கிராசன உரையின் போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க மிகத் தெளிவாகக் கூறியிருந்தார்.

ஒரு நாட்டின் சட்டம் ஒழுங்காகச் செயற்படுவதற்குச் சட்டத்தை அமுல்படுத்தும் அதிகாரிகள் சுதந்திரமாகவும் பாரபட்சமின்றியும் தமது கடமைகளைச் செய்வதற்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

மரண தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், தொலைபேசி மூலம் பெறப்பட்ட ஒப்பந்தத்துக்காக ஒருவரைக் கொல்லக்கூடிய அடியாட்கள் சில பாதாள உலகக் குற்றவாளிகளுக்கு உண்டு.

இந்த நாட்டில் பாதாள உலகக் கும்பல்கள் தாங்களாகவே தோன்றவில்லை. இது வரை அரசியல்வாதிகள் தங்கள் அதிகாரத்தைப் பெறவும், தக்கவைக்கவும் பல்வேறு அக் கும்பல்களின் ஆதரவைப் பெற்றுள்ளனர். அவ்வாறு ஆதரவைப் பெற்ற அரசியல்வாதிகள் அமைச்சர்களாக பதவியேற்றதன் பின்னர் அவருக்கு ஆதரவாக செயற்பட்ட குண்டர்கள் தமது சட்ட விரோதச் செயற்பாடுகளுக்கு அரசியல் ஆதரவைப் பெற்று அமைச்சர்களின் ஆதரவினால் பாதுகாப்புப் படையினரால் அவர்களுக்கு இடையூறு ஏற்படுவதில்லை.

தற்போது ஆரம்பமாகியுள்ள மறுமலர்ச்சி யுகத்தில் புதிய அரசியல் கலாசாரம் ஒன்று உருவாகியிருப்பதை இம்முறை பாராளுமன்றத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மக்கள் பிரதிநிதிகள் மூலம் தெரியவருகின்றது. குண்டர்களால் அனுசரணை பெற்றவர்கள் குப்பையில் வீழ்ந்த வேளையில் இந்நாட்டு ஏழை மக்களுடன் தோளோடு தோள் நின்று போராடிய பெருந்தொகையான மக்கள் இந்த ஆண்டு சபைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதி கூறியது போல், சட்டத்தின் ஆட்சி யுகத்தை உருவாக்கப் போதைப்பொருள் கடத்தல் ஒழிக்கப்பட வேண்டும். கிராம மட்டத்தில் பனைமரம், வாழைத்தண்டு வெட்டி விற்று போதைக்கு அடிமையாகும் இளைஞன் முதல் ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் பாதுகாப்பிற்கு மத்தியில் போதைப்பொருள் விற்பனை செய்யும் வியாபாரி வரை சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

சிவில் சமூகத்தில் அதிக எண்ணிக்கையிலான சட்டவிரோத துப்பாக்கிகள் இன்னும் புழக்கத்தில் உள்ளன என்பது இரகசியமல்ல. இது சமூக ஜனநாயகத்துக்குக் கடுமையான ஆபத்தாக இருப்பதுடன், அரசின் இருப்புக்கு அச்சுறுத்தலாகவும் உள்ளது. பதவிகளை இழந்த அமைச்சர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட பல துப்பாக்கிகள் இன்னும் மீள வழங்கப்படவில்லை என தெரியவந்துள்ளது.

இது சமூகத்திற்கு மிகவும் ஆபத்தானது. அதிகாரம் இழந்த இந்த அரசியல்வாதிகளுக்கு இனி பாதுகாப்பு தேவையில்லை என்பது போல, அவர்கள் எந்த நோக்கத்திற்காக தொடர்ந்து துப்பாக்கிகளை வைத்திருக்கிறார்கள் என்பதை கண்டறிய வேண்டும்.பல்வேறு தீமைகள் நிறைந்த இந்த சமுதாயத்தை தூய்மைப்படுத்துவது எளிதான காரியம் இல்லை என்பது உண்மைதான்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.


பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

நம்பிக்கையுடன் நாமே தேடும் ஆதாயங்கள் உண்மை வழியில், நேர்மையாக இருக்க வேண்டும். ஒரு வர்த்தகர் நம்பிக்கையுடன் ஒரு தொழிலைத் தொடங்கினால் அது நிலையாக இருக்க நேர்மை, நாணயம் மிக அவசியம்.

எந்தத் தொழிலிலும் எல்லோரும் உயர் நிலைக்கு வரமுடியும். ஆனால், மக்கள் நலன் பற்றியும் கவனமெடுக்க வேண்டும்.

நீங்கள் சரியாக நடந்தால் உங்களை நோக்கி ஒரு பெருங்கூட்டமே இணைந்து வரும். லாபம் என்பது வெறும் பணம் அல்ல. மக்களை நேசிப்பதால் வரும். அன்பினால் கிடைத்த வரவுகளாகும்.

இணைந்த மக்கள் பலமே, வையகத்தின் செழிப்புமாகும். பிறரைத் தூக்கிவிடாதவனும், தன்னை மட்டும் கவனிப்பவனும், எவரது வளர்ச்சியைத் தடுப்பவனும் உலகத்தால் வீசியெறியப்படுகின்றான்.

உலகம் ஒரு பெரிய வீடு ஒவ்வொரு நாடுகளும் அதன் அறைகள் என்பதை சகல அரசுகளும் உணர வேண்டும். எமக்கே எல்லாம் என எந்த வல்லரசும் பேராசை கொண்டால். என்ன நடக்கும். என்பதைக் கற்பனை செய்யமுடியாது. ஒவ்வொரு மனிதனும் இந்த உலகை இயக்குகின்றான். எனவே, எமக்கானதே இந்த புவனம் உணர்க.

நன்றி-பருத்தியூர் பால.வைரவநாதன்

### அமைச்சர் நியமன விவகாரம்: முஸ்லிம் சமூகத்தின் நியாயமான

# கோரிக்கையை மறுப்பது தர்மமா?

மொஹமட் பாதுஷா

சிறுபான்மை முஸ்லிம்கள் ஐக்கிய மக்கள் சக்திக்கு இலட்சக்கணக்கான வாக்குகளை அளித்துள்ள போதிலும், இதுவரை முஸ்லிம் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படாமை நாடு முழுக்க பேசுபொருளாகவும் வாதத்திற்குரிய விவகாரமாகவும் மாறியிருக்கின்றது.

ஆரம்பத்தில் இந்த விடயத்தை முஸ்லிம்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை எனலாம். இன நல்லிணக்கம். சமத்துவம் பேசும் அனுரகுமார தலைமையிலான அரசாங்கம் குறைந்தது ஒரு முஸ்லிம் எம்.பியையாவது அமைச்சராக நியமிக்கும் என்றே நம்பினார்கள். அது நடக்கவில்லை என்றதும், அடுத்தடுத்த நாட்களில் நடக்கும் என்ற எதிர்பார்ப்பும் இருந்தது.

ஆனால், இன்று வரை முஸ்லிம் ஒருவருக்கு அமைச்சுப் பதவி கொடுக்கப்படவில்லை. அமைச்சுப் பதவி வழங்கப்படவில்லை என்பதை விட அதற்காக அரசாங்க தரப்பில் வழங்கப்படும் பதில்களும் பிரதிபலிப்புகளும் முஸ்லிம் சமூகத்தை மனம்கோணச் செய்துள்ளது என்பதே முக்கியமானது.

சிறுபான்மைச் சமூகங்களின் அதிகமான வாக்குகளைப் பெற்ற அரசாங்கம் என்றால் அது இப்போது அமையப் பெற்றுள்ள என்.பி.பி. அரசாங்கம்தான். அனுரகுமார என்ற நபர் மீதான நம்பிக்கையே இதற்கு முக்கால்வாசி காரணம் எனக் கூறலாம்.

அந்த வகையில், சுமார் 10 இலட்சம் முஸ்லிம்கள் இம்முறை என்.பி.பிக்கு வாக்களித்திருந்தனர். பல முஸ்லிம் எம்.பிக்கள் அக்கட்சி ஊடாக தெரிவு செய்யப்பட்டனர். ஏன், அம்பாறை (திகாமடுல்ல) மாவட்டத்தில் சிங்கள மக்களை விட முஸ்லிம்கள் அதிகளவு வாக்களித்திருந்த போதும், ஒரு முஸ்லிமும் எம்.பியாக தெரிவு செய்யப்படவில்லை. முஸ்லிம்களின் வாக்குகளால் 4 சிங்கள எம்.பிக்கள் தெரிவாகினர்.

இந்நிலையில், அம்பாறை மாவட்டத்தில் வேட்பாளர் றிசாட் புகாரி தெரிவு செய்யப்படாமை தொடர்பில் அப் பகுதியில் கடுமையான உள்ளகக் குழப்பங்களும் சர்ச்சைகளும் எழுந்திருந்த சூழலில், அரசாங்கம் தனது தேசியப் பட்டியலில் ஏ.ஆதம்பாவாவை எம்.பியாக நியமித்தது.

விருப்பு வாக்குப் பட்டியலில் முன்னணியில் இருக்கின்ற ஒரு வேட்பாளரை விடுத்து, இன்னுமொரு வேட்பாளருக்குத் தேசியப் பட்டியல் கொடுக்கப்பட்டமை ஏன் என்ற கேள்விகள் எழுந்தாலும், அரசாங்கம் தனது முன்னைய நிலைப்பாடுகளை மாற்றியமைத்து, அம்பாறை மாவட்ட முஸ்லிம் ஒருவரை தேசியப் பட்டியலில் நியமித்ததை முஸ்லிம் சமூகம் உயர்வாகக் கருதியது என்பதை மறுக்க முடியாது.

அமைச்சரவை நியமனம் மேற்கொள்ளப்பட்டபோது, தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்த இருவருக்கு அமைச்சுப் பதவிகள் கிடைக்கப் பெற்றன. நல்லிணக்கம் பேசுகின்ற அனுர அரசு, முஸ்லிம் எம்.பி. ஒருவருக்காவது அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சை நிச்சயம் வழங்கும் என்று முஸ்லிம் சமூகம் திடமாக நம்பியது.

ஆனால், அது இடம்பெறவில்லை. அதன் பிறகாவது அது கிடைக்கும் என்று என். பி.பிக்கு வாக்குகளைச் சேகரித்துக்கொடுத்த முஸ்லிம் வேட்பாளர்கள் கூறினர். அதுவும் நடக்கவில்லை. நடக்கும் என்ற நம்பிக்கையும் குறைந்து போயிருக்கின்றது என்றே கூற வேண்டும்.

முஸ்லிம் ஒருவரையாவது அமைச்சரவையில் நியமிக்கவில்லை என்ற விமர்சனங்கள் மேலெழத் தொடங்கிய பிறகு, அரசாங்கம் தன்னை சுதாரித்துக்கொள்ளும் என்றும் அமைச்சர் ஒருவரை நியமிக்கும் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இதனை நியாயப்படுத்துவதற்காக அரசாங்க தரப்பில் முன்வைக்கப்பட்ட கதைகள் அந்த நம்பிக்கையைத் தவிடு பொடியாக்கியுள்ளன. குறிப்பாக, அக்குறணையில் அமைச்சர் விஜித்த ஹேரத் பேசுவதாக வெளியாகியுள்ள வீடியோவில் அவர் கூறியுள்ள பதில் முஸ்லிம்களை முகம் சுழிக்க வைத்துள்ளது எனலாம்.

முஸ்லிம் ஒருவரை அமைச்சராக நியமிப்பதோ நியமிக்காமல் விடுவதோ ஒரு புறமிருக்க, அதனை நியாயப்படுத்துவதற்காகவும். முஸ்லிம் சமூகத்தின் கோரிக்கையை மறுதலிப்பதற்காகவும் அதிகாரத் தோரணையில் அளிக்கப்படும் பதில்கள் என்.பி.பிக்கு வாக்களித்த, வாக்களிக்காத முஸ்லிம்களுக்கு நல்ல சகுணமாக தெரியவில்லை.

உண்மையில், இந்த நாட்டின் தமக்கு வாக்களித்த முஸ்லிம்களிற்கு கைமாறு செய்து, அவர்களுக்கான பங்கை உறுதிப்படுத்தும் விதமாக ஒரு முஸ்லிம் எம்.பியை அமைச்சராக நியமித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் இந்தச் சர்ச்சையைத் தவிர்த்திருக்கலாம்.

முஸ்லிம் ஒருவர் அமைச்சராக இருந்தால் மட்டுமே முஸ்லிம் சமூகம் தொடர்பான விடயங்கள் கலந்துரையாடும் போது, அது பற்றிய பின்னணியை, விளக்கத்தை, முஸ்லிம் சமூகத்தின் நிலைப்பாட்டை அமைச்சரவை நேரடியாக அறிந்துகொள்ள முடியும். அதேபோல், முஸ்லிம்களின் அபிலாஷைகளை அந்த அமைச்சர் முன்வைக்கவும் வாய்ப்புக் கிடைக்கும்.

அமைச்சரவையில் பன்மைத்தன்மையை வெளிப்படுத்துவது இராஜதந்திர ரீதியான விவகாரங்களுக்குச் சாதகமானதாக அமையும். குறிப்பாக அரபு நாடுகளுடன் உரையாடுவதற்கும் உறவாடுவதற்கும் முன்னைய அரசாங்கங்கள் முஸ்லிம் அமைச்சர்களைப் பயன்படுத்தியதை இவ்விடத்தில் குறிப்பிட வேண்டும்.

இருப்பினும், அரசாங்கம் அதனைத் தானாகச் செய்யவும் இல்லை. முஸ்லிம்கள் கோரிய பிறகாவது முஸ்லிம் அமைச்சரை நியமிக்கவோ அல்லது 'இன்னும் சில நாட்களில் நடவடிக்கை எடுப்போம்' என்றோ கூறவில்லை. மாறாக, அதிகாரத் தோரணையை வெளிப்படுத்தும் பதிலே கிடைக்கின்றது. கம்பஹா மாவட்ட எம்.பி. முனீர் முழப்பர் பிரதியமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளதுடன். புதிய சபாநாயகராக வைத்தியர் றிஸ்வி சாலி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இதனை முஸ்லிம் சமூகம் நன்றி உணர்வுடன் நோக்குகின்றது.

ஆனால், இந்த நல்லெண்ணம் அமைச்சரவை நியமனத்தில் வெளிப்படவில்லை. அத்துடன், ஒரு அமைச்சரின் வேலையை இவர்களால் செய்ய முடியாது என்பதையும் கவனிக்க வேண்டும்.

முஸ்லிம் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்படாமல் இருக்கின்றமை ஒரு பெரிய விடயமல்ல. ஆனால், அமைச்சரவையில் முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர் மட்டும் இல்லாதிருப்பது சிறிய விடயம் என்று யாரும் வியாக்கியானம் கூறவும் கூடாது.

குடந்த எல்லா அமைச்சரவையிலும் முஸ்லிம் ஒருவர் அமைச்சராக இருந்திருக்கின்றார். முஸ்லிம் அமைச்சர்கள் இருந்த அரசாங்களில் முஸ்லிம்களின் நலனுக்காக பதவியைச் துச்சமென நினைத்துப் பாடுபட்டார்கள் என்று கூற முடியாது.

என்.பி.பி. அரசில் ஒருவர் அமைச்சராக நியமிக்கப்பட்டாலும், அவர் கட்சியின் கட்டுக்கோப்புக்களை மீறி சமூகத்திற்காகக் களத்தில் நிற்பாரா என்பதும் தெரியாது.

அதற்காக, முஸ்லிம் ஒருவரை அமைச்சராக நியமிக்காத விடயத்தை நியாயப்படுத்த முடியாது. இது முஸ்லிம்களின் உரிமைப் பங்கு ஆகும். இவ்வாறு கோருவது இனவாதம் என்றோ, முஸ்லிம் சமூகம் இனத்துவ அடிப்படையில் இவ்விடயத்தைப் பிரித்து நோக்குகின்றது என்றோ என்.பி.பி. செயற்பாட்டாளர்கள் கூறுவது அவர்களது அறியாத்தனமாகும்.

அப்படிப் பார்த்தால், ஒரு அமைச்சையே கொடுக்க முடியாதவர்கள் முஸ்லிம்களின் அபிலாஷைகளை எங்ஙனம் கையாள்வார்கள்? தமது சமூக உரிமைக்காகக் குரல் கொடுக்காத என்.பி.பியின் எம்பி.க்கள் மற்றும் வேட்பாளர்களை முஸ்லிம் சமூகம் எவ்வாறு நம்புவது? என்ற பல சந்தேகங்கள் எழுகின்றன.

முஸ்லிம் எம்.பிக்கள் புதியவர்கள் என்பதால் அமைச்சராகப் பதவி வகிப்பதற்கு அவர்களுக்கு அனுபவம் போதாது என்ற பாணியிலான ஒரு விளக்கமும் சொல்லப்பட்டுள்ளது. அது உண்மைதான், அமைச்சர் என்ற பதவி அவ்வளவு இலகுவானதல்ல. அதன் கனதியை, சுமையை தூக்குவதற்குப் பொருத்தமானவர்களையே நியமிக்க வேண்டும் என்ற கருத்துடன் நூறு வீதம் உடன்படலாம்.

அப்படியென்றால், கடந்த பொதுத் தேர்தலில் போடப்பட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் அமைச்சராகும் தகுதியைக் கொண்டிராதவர்களா அல்லது அப்படியான ஆளுமை குறைந்த வேட்பாளர்களையே என்.பி.பி நிறுத்தியிருந்ததா என்ற கேள்வி எழுகின்றது.

அதுமட்டுமன்றி, இம்முறை என்.பி.பி. ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரு சிலவரத் தவிர மற்றெல்லாரும் புதியவர்கள். இதில் துறைசார்ந்தவர்கள், வைத்தியர்கள், செயற்பாட்டாளர்கள் என பலர் உள்ளார்கள். ஆனால், எல்லோரும் அப்பேர்ப்பட்டவர்கள் என்று கூற முடியாது.

அப்படியென்றால், நியமிக்கப்பட்டுள்ள அமைச்சர்கள் எல்லோரும் இதற்கு முன்னர் அமைச்சராக இருந்த அனுபவத்தைக் கொண்டவர்களா? அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் முஸ்லிம் எம்.பிக்களை விடப் பொருத்தமானவர்கள் என்பதை நியாயப்படுத்த முடியுமா என்று முஸ்லிம் அரசியல்வாதி ஒருவர் எழுப்பியுள்ள கேள்விக்குப் பதிலென்ன?

அமைச்சர் நியமன விவகாரம் சர்வசாதாரணமானது. அதனை முஸ்லிம்கள்தான் பெரியதொரு விடயமாகத் தூக்கிப் பிடிக்கின்றார்கள் என்றுதான் ஆரம்பத்தில் தோன்றியது. இது விடயத்தில் தேவையற்ற சிக்கல்களைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஒரு அமைச்சரை நியமித்திருக்கலாம்; அல்லது நம்பிக்கை தரும் அறிவிப்பை விடுத்திருக்கலாம்.

ஆனால், அது நடக்காமல், அரசாங்க தரப்பில் இவ்விடயம் தட்டிக் கழிக்கப்படுவதும் சமகாலத்தில் இவ்வாறு முஸ்லிம்கள் கோருவது இனவாதம் என்றும் இன நல்லிணக்கத்தைக் குலைக்கும் முயற்சி என்றும் என்.பி.பி. ஆதரவாளர்கள், வேட்பாளர்கள் கூறுவதுமே இந்தப் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது.

முஸ்லிம்கள் இந்த நாட்டின் பிரஜைகள் என்ற வகையிலும், தனியொரு சமூகம் என்ற வகையிலும்; அவர்களது பிரதிநிதித்துவம் எல்லா இடங்களிலும் இருக்க வேண்டும். இலங்கையர் என்ற பொதுமைப்படுத்தலின் கீழ் ஒன்றுபட்டு வாக்களித்தலும் ஒற்றுமையாகப் பயணித்தலும் வேறு. ஆனால், தனியொரு இனக் குழுமம் என்ற வகையில் அதற்கான பங்குகள், அங்கீகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

எனவே, இதனை அரசாங்கமே இயல்பாகச் செய்திருக்க வேண்டும். முஸ்லிம் சமூகம் கோரிய பிறகாவது அதனைச் சரிப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், இப்போதும் அதனை மறுதலிப்பதற்கு அரசிற்கு அதிகாரம் இருக்கலாம், ஆனால், அது தர்மமில்லை.

## கடிதங்கள்

### பஸ் இன்மையால் அவதி

நாவலப்பிட்டி-கடியன்லேன தலவாக்கலை வீதியில் சேவையில் ஈடுபட்டுவந்த நாவலப்பிட்டி நகரில் இருந்து காலை 6.30 மணிக்குப் புறப்படும் இலங்கை போக்குவரத்து சபை பஸ் கடந்த வாரங்களில் இருந்து சேவையில் இல்லாமையால் பலரும் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்குகிறார்கள்.

இந்த பஸ் சேவையை நம்பியே நூற்றுக்கு மேற்பட்ட பயணிகள் இவ்வழியே பயணத்தை மேற்கொள்கிறார்கள். பாடசாலை மாணவர்களும் பெரும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர். நாவலப்பிட்டி பஸ் டிப்போவினால் நிர்வகிக்கப்படும் இப் பஸ் சேவை குறித்து டிப்போ தரப்பினர்களுக்கு எடுத்துரைத்த போதிலும், பொருத்தமான நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் பயணிகள் கடும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

இந்த வீதியில் சேவையில் ஈடுபட்டிருந்த சாரதி சேவையில் இருந்த போது, இறந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னரே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ள பயணிகள், மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு வலியுறுத்தியுள்ளனர்.

# பாலர்களது திருப்புமுனையாக அமையும் பாலர் முன் பள்ளி

பாலர் முன் பள்ளிக் கல்வி 3 முதல் 5 வயது குழந்தைகளுக்கான அடிப்படை நிலையில் சேவையாற்றுகிறது. இந்த ஆரம்பக் கல்வி அனுபவம், குழந்தைகளின் மொத்த வளர்ச்சிக்கும் முக்கியமானது. அவர்களை எதிர்கால கல்வி மற்றும் சமூக சவால்களுக்குத் தயார் செய்கிறது. முன் பள்ளிக் கல்வி குழந்தையின் வளர்ச்சியின் பல்வேறு அம்சங்களை ஊக்குவிக்கிறது. சமூக ரீதியாக, குழந்தைகள் நண்பர்களுடன் தொடர்பு கொண்டு, பகிர்வு மற்றும் முக்கியமான தொடர்பாடல் திறன்களை உருவாக்குகிறார்கள். உணர்ச்சி ரீதியாக, அவர்கள் தங்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, மற்றவர்களுடன் பரிவு கொள்வதற்கான அறிவை பெறுகிறார்கள். அறிவியல் ரீதியாக முன் பள்ளி, கட்டமைக்கப்பட்ட செயல்பாடுகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்கும், விமர்சன சிந்தனை மற்றும் உருவாக்கத்தை அறிமுகப்படுத்துகிறது. முக்கியமாக, இது குழந்தைகளை முறைப்படுத்தப்பட்ட கல்விக்குச் சீரான முறையில் அடிப்படைகளைப் பயிற்றுவிக்கிறது.

விளையாட்டை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அணுகுமுறை, முன் பள்ளிக் கல்வியின் மையமாக உள்ளது. குழந்தைகள் விளையாட்டை கற்றலின் முதன்மை முறையாகப் பயன்படுத்துகின்றனர். இது அவர்களுக்கு நிலைபெற்ற முறையில் கருத்துக்களை ஆராய்ந்து கண்டுபிடிக்க உதவுகிறது. குழு விளையாட்டுகள் மற்றும் கலைப் பணிகள் போன்ற கட்டமைக்கப்பட்ட செயல்பாடுகள், ஒழுங்கு மற்றும் ஒழுங்கு முறையை ஊக்குவிக்கிறது. தனிப்பட்ட கவனம் ஒரு முக்கிய அம்சமாகவும் உள்ளது, ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்துவமான கற்றல் பாணிகள் உண்டு, இப் பாடசாலை கல்வி பெற்றோர்களுக்கு ஒத்துழைப்பு செய்யவும், குழந்தையின் வளர்ச்சியை ஆதரிக்கவும் உதவுகிறது.

சுருக்கமாக, முன் பள்ளிக் கல்வி குழந்தையின் ஆரம்ப வளர்ச்சிக்கு முக்கியமாக உள்ளது. இது ஆயுள் முழுவதும் கற்றலுக்கான அடித்தளத்தை அமைக்கிறது. பள்ளியில் மற்றும் அதன் பின்பு விளங்குவதற்கான தேவையான திறன்களைக் குழந்தைகளுக்கு வழங்குகிறது, இதன் மூலம் ஆரம்ப குழந்தை கல்வியின் முழுமையான அணுகுமுறையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

**தருமலிங்கம் லுகிர்தா,**
**ஊடக கற்கைகள் துறை,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

*கேள்வி: ங்கள் முன்பள்ளி ஆசிரியராக இருக்க ஊக்கம் அளித்தது என்ன?*

பதில்: என்னை முன் பள்ளி ஆசிரியராக உருவாக்கிய காரணம், குழந்தைகளின் வளர்ச்சியின் அடிப்படையில் பங்கு வகிக்கவேண்டும் என்ற ஆழமான ஆர்வம் ஆகும். குழந்தைகளின் கற்றல் மற்றும் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டேன். ஏனெனில், அவர்கள் மிகவும் உருவாக்கும், ஆராயும் மற்றும் புதிய விடயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.இது என்னால் ஒரு சிறிய வகுப்பில் உள்ள குழந்தைகளைப் பார்வையிடவும், அவர்களுடைய அன்பும் கற்பனைக்கும் அடிப்படையில் ஒரு பாதுகாப்பான மற்றும் ஊக்குவிக்கும் சூழலை உருவாக்கவும் உதவியது. நான் கற்றுக் கொண்ட சில விஷயங்கள், வகுப்பில் விளையாட்டு அடிப்படையிலான கற்றல், சித்திர கலை மற்றும் குழு செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு, குழந்தைகளின் சமூக மற்றும் உணர்ச்சி திறன்களை மேம்படுத்த உதவியது.இவ்வாறு, நான் அவர்களின் சிறிய வெற்றிகளைக் கண்டுபிடிக்கவும், அவர்களுடைய எதிர்காலத்திற்கு அடித்தளம் அமைப்பதற்கு உதவுவதில் பெருமை அடைகிறேன்.

*கேள்வி: நீங்கள் எவ்வாறு ஒரு சாதகமான கற்றல் சூழலை உருவாக்குகிறீர்கள்?*

பதில்: சாதகமான கற்றல் சூழலை உருவாக்க நான் பல வழிகளைப் பயன்படுத்துகிறேன். குழந்தைகளின் முயற்சிகளைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிக்க ஒரு நல்ல முறையாக நேர்மறை உறுதிப்படுத்தலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறேன். இது அவர்களின் தன்னம்பிக்கையை வளர்க்கிறது. வகுப்பில் தெளிவான மற்றும் எளிமையான நடைமுறைகள் அமைத்து, குழந்தைகளுக்கு அந்த நடைமுறைகளை எளிதில் புரிந்துகொள்ள உதவுகிறேன். இது அவர்களுக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் அறிவுரையளிக்கும் சூழலைக் கொடுக்கும்.குழுச் செயல்பாடு மற்றும் பணியிடத்தை ஊக்குவிக்கிறேன், இதனால் குழந்தைகள் ஒருவருக்கொருவர் உதவுவதையும், தங்களின் சமூக திறன்களை வளர்க்கவும் உதவுகிறது. விளையாட்டை ஒரு முக்கியமான கற்றல் உத்தியாகக் கையாள்கிறேன், ஏனெனில் இது குழந்தைகளுக்கு ஆர்வமளிக்கும். மற்றும் அவர்கள் கற்றுக்கொள்ளவும் உதவுகிறது. இதற்காக, ஒவ்வொரு குழந்தையின் தேவைகளைப் புரிந்து கொண்டு, அவர்களைக் கையாள்வதில் கவனம் செலுத்துகிறேன் இதனால் அவர்கள் ஆர்வமுடன் கற்றுக்கொள்ள முடியும்.

*கேள்வி: வகுப்பில் கடினமான செயற்பாடுகளை நீங்கள் எவ்வாறு கையாள்கிறீர்கள்?*

பதில்: வகுப்பின் ஆரம்பத்தில் குழந்தைகளிடம் அவர்களுக்குத் தெளிவான வழிகாட்டுதல்களை வழங்கப்படுகிறது. ஒரு குழந்தை சரியாக நடக்கவில்லை என்றால், நான் அவர்களை மென்மையாக மறுதிசைபு செய்கிறேன். இது மற்ற குழந்தைகளை விரட்டாமல், அவர்களின் கவனத்தை மாற்றுவதில் உதவுகிறது. இது பரஸ்பர மரியாதை, ஒத்துழைப்பு மற்றும் பகிர்வு ஆகியவற்றை ஊக்குவிக்கும். குழு செயல்பாடுகள் மூலம், குழந்தைகளை ஒருவருக்கொருவர் ஆதரிக்க அவர்களை ஊக்குவிக்கிறது. உரையாடல் மூலம் அவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவர்கள் ஏன் அந்த வகையில், நடந்து கொண்டனர் என்பதைக் கேள்வி செய்கிறேன். இந்த உத்திகள் மூலம், நான் குழந்தைகளுக்கு ஒரு பாதுகாப்பான மற்றும் ஊக்குவிக்கும் சூழலை வழங்க முடியும், இதனால் அவர்கள் நல்ல நடத்தையைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு அதிகமாகிறது.

*கேள்வி: நீங்கள் எவ்வாறு உங்கள் பாடங்களை திட்டமிடுகிறீர்கள்?*

பதில்: நான் என் பாடங்களைத் திட்டமிடும்போது, கீழ்க்காணும் மூன்று முக்கிய அம்சங்களை உள்ளடக்கியதாக ஒருங்கிணைக்கிறேன் குழந்தைகள் விளையாட்டில் கற்றுக்கொள்வது மிகவும் முக்கியம். நான் பாடங்களை உருவாக்கும்போது, விளையாட்டு செயல்பாடுகளை மையமாகக் கொண்டு, ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கிறேன். கணிதம் அல்லது மொழி கற்றலில் விளையாட்டுகளைச் சேர்க்கிறேன், இது அவர்களுக்கு கற்றலை சுமுகமாக்குகிறது. ஒவ்வொரு குழந்தையின் வளர்ச்சி நிலைகளை கவனமாகப் பார்த்து, அவர்களின் தனித்துவமான திறன்களை அடிப்படையாகக் கொண்டு பாடங்களை உருவாக்குகிறேன். இது, அனைத்து மாணவர்களுக்கும் சிக்கலான மற்றும் வெற்றி அடையக்கூடிய அனுபவங்களை வழங்குகிறது. மாணவர்களின் தனிப்பட்ட தேவைகளைப் புரிந்துகொண்டு, அவர்களுக்கு சிறப்பான ஆதரவுகள் வழங்குகிறேன். உதாரணமாக, குறிப்பிட்ட குழந்தைக்குத் தனியான கவனத்தைத் தேவைப்பட்டால், நான் அவருக்கு மேலதிக செயல்பாடுகளை வழங்குகிறேன். இந்த முறையைப் பயன்படுத்துவதன் மூலம், நான் உள்ளடக்கிய மற்றும் எல்லா மாணவர்களுக்கும் ஏற்ற பாடங்களை உருவாக்க முடியும்.

*கேள்வி: நீங்கள் செயல்படுத்திய வெற்றிகரமான செயல்பாடுகளை விவரிக்க முடியுமா?*

பதில்: குழந்தைகளின் சமூக மற்றும் குழு வேலை திறன்களை மேம்படுத்துகிறேன். அறிவியல் மற்றும் கணித அடிப்படையில் அடிப்படைக் கருத்துக்களை கற்றுக்கொள்வது குழந்தைகளிடையே உற்சாகத்தை மற்றும் ஆர்வத்தை உருவாக்குகிறது. இந்த செயல்பாட்டில், குழந்தைகள் குழுக்களில் செயல்பட வைக்கிறது. ஒவ்வொரு குழுவும் 4-5 பேர் கொண்டதாக அமையும். கேள்விகள் சுற்றுச்சூழல், அறிவியல் அல்லது கணிதம் அடிப்படையில் இருக்கும். குழந்தைகள் குழுவாகப் பேசுவதன் மூலம் தகவல்களைப் பகிர்ந்துகொள்வர். அவர்கள் ஒருவருக்கொருவர் உதவுவதற்கான தன்னம்பிக்கையுடன் செயல்பட இது வழிவகுக்கும். மாணவர்கள் ஒருவருக்கொருவர் ஆதரவாக இருந்து கருத்துகளை பறிமாறிக் கொள்வர். இது அவர்களுக்கு ஒரு வெற்றியின் உணர்வை கொடுத்து. குழந்தைகளுக்கு கற்றலில் ஆர்வம் மற்றும் ஒத்துழைப்பை ஊக்குவிக்க உதவும்.

*கேள்வி: நீங்கள் பெற்றோர்களுடன் எவ்வாறு தொடர்பு கொள்கிறீர்கள்?*

பதில்: நான் பெற்றோர்களுடன் உறவுகளை ஏற்படுத்துவதற்காகப் பல முறைகளைப் பயன்படுத்துகிறேன். மாதாந்த ரிப்போட் வழங்குகிறேன், இதில் வகுப்பில் நடந்த செயல்பாடுகள், புதிய தலைப்புகள், மற்றும் எதிர்கால நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்கள் உள்ளன. இது பெற்றோர்களுக்கு நிலையான தகவல்களை வழங்குகிறது. மாதம் ஒருமுறை பெற்றோர்களை சந்திக்கிறேன். இந்த சந்திப்புகளில், நான் குழந்தைகளின் முன்னேற்றம், அக்கறை, மற்றும் எந்த சிக்கல்கள் இருந்தாலும் பேசி, ஒருங்கிணைந்து தீர்வு காண முயற்சிக்கிறேன். முக்கியமான தகவல்களை உடனுக்குடன் பகிர்வதற்கு, செயல்முறை மற்றும் நிகழ்வுகள் பற்றிய தகவல்களை வாட்சப் போன்ற அப்களில் அனுப்புகிறேன். இது உடனடியாக தகவல்களைப் பெற்றோர்களிடம் சேர்க்க உதவுகிறது. பெற்றோர்கள் எப்போது வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளலாம் என்பதற்காக, பெற்றோர்கள் கற்றல் மற்றும் வளர்ச்சி தொடர்பான எந்த கேள்விகளுக்கும் எப்போது வேண்டுமானாலும் என்னை தொடர்பு கொள்வதற்கான வழிமுறைகளை உருவாக்கி உள்ளேன். பெற்றோர்களுடன் நல்ல உறவுகளை உருவாக்குவது குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு உதவும்.





*கேள்வி: விளையாட்டு குழந்தையின் கற்றலில் என்ன பங்காற்றுகிறது?*

பதில்: விளையாட்டுக்கு குழந்தைகளின் கற்றலில் மிக்க முக்கியத்துவம் உள்ளது, மேலும் இது அறிவியல், சமூகம், உணர்ச்சி ஆகிய மூன்று முக்கியமான வளர்ச்சி அம்சங்களில் பெரிதும் தாக்கம் செலுத்துகிறது. விளையாட்டின் மூலம் குழந்தைகள் ஆராய்ச்சி மற்றும் வினைத்திறனுடன் செயல்படக் கற்றுக்கொள்கின்றனர். வெவ்வேறு பொருட்களுடன் விளையாடுவதன் மூலம், அவர்கள் புரிந்து கொள்ளவும், அமைப்புகள் மற்றும் வடிவங்களைக் கற்றுக்கொள்ளவும் முடியும். குழுவாக விளையாடும் போது, குழந்தைகள் ஒத்துழைப்பு, பகிர்வு மற்றும் சமூக நெறிகளைக் கற்றுக்கொள்கிறார்கள். விளையாட்டின் போது, உரையாடல் மற்றும் கூட்டுறவு அவர்களுக்கு சமூக உறவுகளை வளர்க்க உதவுகிறது. விளையாட்டின் மூலம் குழந்தைகள் தங்கள் உணர்வுகளை அறிந்து கொள்வதற்கும், அந்த உணர்வுகளை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கும் வாய்ப்புகள் பெறுகின்றனர். இது அவர்களுக்கு ஊக்கம், சகிப்புத்தன்மை, சகோதரத்துவம், விட்டுக்கொடுப்பு போன்றவற்றை வளர்க்கிறது. விளையாட்டுக்கான வாய்ப்பு வழங்கப்படுவதன் மூலம், குழந்தைகள் ஒரே நேரத்தில் பல திறன்களை வளர்த்து, கற்றலின் அடிப்படைகளை அடிக்கோலாகக் கொண்டுவருகிறார்கள்.

*கேள்வி: நீங்கள் உங்கள் மாணவர்களின் முன்னேற்றத்தை எவ்வாறு மதிப்பீடு செய்கிறீர்கள் ?*

நான் வகுப்பில் மாணவர்களின் நடத்தை மற்றும் செயற்பாடுகளைக் கவனித்து, அவர்களின் முன்னேற்றத்தைப் பற்றிய தகவல்களைப் பதிவு செய்கிறேன். இந்த தகவல்கள், ஒவ்வொரு மாணவரின் சமூக மற்றும் கல்வித் திறன்களைப் புரிந்து கொள்ள உதவுகிறது.மாணவர்கள் உருவாக்கும் குறிப்புகளை, கலைப்பணி, மற்றும் செயல்பாடுகளை உள்ளடக்கிய தொகுப்புகளை உருவாக்குகிறேன். இது அவர்களது முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவும், வளர்ச்சியைப் பார்வையிடவும் உதவுகிறது. ஒவ்வொரு மாணவரின் செயல்பாடுகள், குழு வேலை மற்றும் தனிப்பட்ட முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு, முறைசாரா மதிப்பீடுகள் நடத்துகிறேன். இது அவர்களின் திறன்களை வெளிப்படுத்துவதில் உதவுகிறது. பெற்றோர்களுடன் மாதாந்த சந்திப்புகளில், மாணவர்களின் முன்னேற்றத்தைப் பற்றிய விபரங்களைப் பகிர்ந்துகொள்கிறேன். இதனால் பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளின் வளர்ச்சியைப் புரிந்துகொள்ள முடிகிறது. இந்த முறைகள், மாணவர்களின் முழுமையான முன்னேற்றத்தை மதிப்பீடு செய்ய மற்றும் அவர்களை ஊக்குவிக்க உதவுகிறது.

**“ ஆசிரியருடன் நடந்த கலந்துரையாடல் மூலம், குழந்தைகளின் கல்வி அடிப்படை வலுவாக அமைய ஆசிரியர்கள் செய்யும் பணிகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. குணநலமும் சமூகத் திறன்களும் சிறுவயதிலேயே வளர முக்கியத்துவம் வாய்ந்தது, மற்றும் நல்ல சூழலை வழங்குவதில் ஆசிரியர்கள் மிகப் பெரிய பங்கை வகிக்கிறார்கள்**

*கேள்வி: நீங்கள் உங்கள் வகுப்பில் அன்றாட உள்ளடக்கத்தை எவ்வாறு உருவாக்கம் செய்கிறீர்கள்?*

பதில்: நான் பாடங்களை உருவாக்கும்போது, மாணவர்களின் பல்வேறு கற்றல் பாணிகளை அடிப்படையாகக் கொண்டு, உள்ளடக்கத்தை அமைக்கிறேன். ஒவ்வொரு மாணவரின் தேவைகளைப் புரிந்து கொண்டு, தனிப்பட்ட கற்றல் திட்டங்களை உருவாக்குகிறேன். இது, குறிப்பிட்ட பாடங்களில் அவர்களுக்கான சவால்களை மனதில் வைத்துக்கொண்டு, அவர்களுக்கு முன்னேற்றம் அடைய உதவுகிறது. மாணவர்கள் குழுக்களில் வேலை செய்வதன் மூலம், அவர்கள் ஒருவருக்கொருவர் கற்றுக்கொள்வதை ஊக்குவிக்கிறேன். இது ஒவ்வொரு மாணவரின் தனித்துவத்தை மதித்து, அவர்களின் பின்னணிகளைப் புரிந்து கொள்வதில் உதவுகிறது. மாணவர்களுடன் அடிக்கடி உரையாடி, அவர்களின் சிந்தனைகளை மற்றும் தேவைகளைக் கேட்கிறேன். இதனால், நான் உள்ளடக்கத்தைத் தேவைக்கேற்ப மாற்ற முடியும். இந்த செயற்பாடுகள், வகுப்பில் உள்ளடக்கத்தைச் சரியான முறையில் உறுதி செய்ய உதவுகிறது.

*கேள்வி: இந்த ஆசிரியர் பணியை எவ்வாறு உணர்கிறீர்கள்?*

பதில்: இந்த ஆசிரியர் பணியை மிகப்பெரிய பொறுப்பாகவும் அர்ப்பணிப்பாகவும் உணர்கிறேன். குழந்தைகளின் முதல் கற்றல் அனுபவங்களை அமைப்பது தனது முக்கிய கடமையாகும். குழந்தைகளின் வளர்ச்சியை நேரில் காணும் சந்தோஷமும், அவர்களின் எதிர்காலத்திற்கு வித்திடும் சந்தோஷமான அனுபவங்களை உருவாக்கும்.

இந்த பணியில் நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தி, கடமைகளை சிரமமின்றி நிறைவேற்ற முடிகிறது. முக்கியமான வேலைகளை முன்னுரிமை அளித்து செயல் படுத்துகிறேன்.

பாலர் முன் பள்ளிக் கல்வி குழந்தைகளின் வாழ்க்கையில் முக்கிய திருப்புமுனையாக அமைகிறது. ஆசிரியருடன் நடந்த கலந்துரையாடல் மூலம், குழந்தைகளின் கல்வி அடிப்படை வலுவாக அமைய ஆசிரியர்கள் செய்யும் பணிகளைப் புரிந்துகொள்ள முடிகிறது. குணநலமும் சமூகத் திறன்களும் சிறுவயதிலேயே வளர முக்கியத்துவம் வாய்ந்தது, மற்றும் நல்ல சூழலை வழங்குவதில் ஆசிரியர்கள் மிகப் பெரிய பங்கை வகிக்கிறார்கள். இந்த தகவல்கள் முன் பள்ளிக் கல்வியின் முக்கியத்துவத்தையும் அதை மேம்படுத்தத் தேவையான வழிகளையும் வழங்குகின்றன.



# சங்கானை கோட்டை

ஜனுக்ஷி ஸ்ரீகாந்தன்,
இரண்டாம் வருடம்,
ஊடககற்கை துறை,
யாழ்.பல்கழைக்கழகம்.

யாழ்ப்பாண வரலாற்றில் கிபி 1658 தொடக்கம் 1796 வரையான காலப்பகுதி முக்கியமானதாகக் கருதப்படுகிறது. இக்காலத்தில் ஐரோப்பிய இனத்தவரில் ஒருவரான ஒல்லாந்தர் கைகளில் யாழ்ப்பாணம் உள்வாங்கப்பட்டது. இதன் வெளிப்பாட்டினை ஒல்லாந்தர் கால எச்சங்களின் மூலமாகவும், புரட்டஸ்தாந்து மதம் பெற்ற செல்வாக்கினை அவர்களின் தேவாலயங்களின் ஊடாகவும் அறிந்து கொள்ள முடிகிறது.


இலங்கையின் ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் மூன்று முக்கிய நிர்வாக மையங்களுள் ஒன்றாக "மொமாண்டறி" காணப்பட்டது. ஒல்லாந்தரின் வரலாற்றுச் சின்னங்களை உடுவில், சுண்டிக்குளி, அச்சுவேலி, உடுப்பிட்டி, யாழ்ப்பாணக் கோட்டை போன்ற இடங்களிலுள்ள தேவாலயங்கள் மூலமாகவும் அறிய முடிகின்றது. இவை அனைத்திலும் முக்கியமான வரலாற்றுச் சின்னமாக சங்கானை தேவாலயம் அமைந்துள்ளது.

இத் தேவாலயம் சுமார் 350 வருடங்களினை கடந்த நிலையில், ஒல்லாந்தரின் ஆட்சியின் விளைவினை உறுதிப்படுத்தும் வரலாற்றுச் சின்னமாகக் காணப்படுகின்றது. தற்போது இத்தேவாலயம் சங்கானை கோட்டை எனவும் அழைக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வலிகாம பிரதேசத்தில் சங்கானை என்ற இடத்திலேயே வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இத்தேவாலயம் அமைந்துள்ளது.

இத்தேவாலயம் உள்ளார்ந்த கட்டிடக்கலை மரபினை பின்பற்றி அமைக்கப்பட்டதோடு,

உள்மண்டபம் , வெளி மண்டபம் என இரண்டு மண்டபங்களினை கொண்டும் உள் மண்டத்தினது கூரையானது முருங்கை கற்பாறைகளினைக் கொண்டும் அமைக்கப்பட்டுள்ளது.



முருங்கை கற்களான அகன்ற முன் வளைவைக் (பிறை போன்ற அமைப்பு) கொண்ட பகுதியுடன் தொடர்ந்து நீள் சதுர வடிவிலான முன் மண்டபத்தையும் கொண்டுள்ளது. இவை ஒல்லாந்தருடைய காலத்தின் கலை தொழில்நுட்பத்தினை வெளிப்படுத்துவனாக காணப்படுகின்றன.

கூரையின் மேலிருந்து உள் மண்டபத்திற்குள் மழை நீர் உட்புகாதவாறு சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளது. உள் மண்டபத்திற்குச் செல்லும் நுழைவாயிலானது, ஒல்லாந்தர் கால கலை மரபிற்கு ஏற்ப Arch வடிவ வளைவைக் கொண்டதாகவும் உள் மண்டபத்தில் இரண்டு ஜன்னல்களையும் , வெளி மண்டபத்தில் ஒன்பது ஜன்னல்களினையும் கொண்டமைந்துள்ளது. உள், வெளி ஆகிய இரண்டு மண்டபத்தினது நில அமைப்பு மண்ணினால் அமைந்துள்ளது. அத்தோடு, இன்றைய நிலையில் இத்தேவாலயம் 42 மீற்றர் நீளமும், 12 மீற்றர் அகலமும் கொண்டு 5 பரப்பு காணியில் காணப்படுகின்றது

போர்த்துக்கேயரால் சங்கானைத் தேவாலயம் நிர்மாணிக்கப்பட்டாலும் பின் வந்த ஒல்லாந்தர்களினால் தமது மதம், கலை மரபிற்கு ஏற்ற வகையிலும் அமைப்புக்கள் மாற்றியமைக்கப்பட்டதாகவும் இந்த ஆலயம் பற்றி ஆராய்ந்த ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள் . மேலும் யாழ்பாண கேட்டையும் இவ் தேவாலயமும் ஒன்றாக அமைக்கப்பட்டதாகவும் அந்த ஊர் மக்கள் கூறுகிறார்கள்.

சங்கானை தேவாலயம் ஆனது 1657களில் ஒல்லாந்த மதகுருவான 'பல்தேயிஸ்' பாதிரியாரின் நேரடிக்கண்காணிப்பில் கொண்டுவரப்பட்டது .

வரலாற்று சிறப்புமிக்கதான இவ்இடம் தேவாலயமாகவும் , பாடசாலையாகவும் பயன்படுத்தப்பட்டிருந்தது எனவும் மேலும் போர்த்துக்கேயர் குதிரைகளைக்கட்டி வளர்ப்பதற்கான இடமாகவும் பயன்படுத்தினார்கள்.

இங்கு மட்டுமன்றி, யாழ்ப்பாணத்தில் மொத்தமாக 18,000 மாணவர்கள் கல்வி கற்றனர் எனவும் அவர்களுள் 12357 மாணவர்கள் ஞானஸ்தானம் பெற்றார்கள் எனவும் ஒல்லாந்த அரசின் அறிக்கைகளிலிருந்து அறிந்து கொள்ள முடிகிறது.

தேவாலய மத குருவிற்குரிய வீடமைந்திருந்த கட்டட அத்திவாரங்கள் , எச்சங்கள் சிதைவடைந்த நிலையிலும் தேவாலயத்திற்கு அருகில் காணப்படுகின்றன . இன்றும் அன்றைய காலணித்துவ ஆட்சியின்போது, பிரதேசத்தில் ஏற்பட்டிருந்த மாற்றங்களுக்குச் சான்றாக இவை விளங்குகின்றன.

அந்நிய கலை மரபான ஒல்லாந்தக்கலை மரபினை பிரதிபலித்து நிற்கின்ற வகையிலும் பல நூற்றாண்டுகளைக் கடந்து ஒல்லாந்தரின் யாழ்ப்பாண ஆட்சியினையும் புரட்டஸ்தாந்து மதம் பெற்ற செல்வாக்கினை நிலை நிறுத்தும் முக்கிய பண்பாட்டுச் சின்னமாகவும் இவை அமைகின்றன.

2007.02.23ஆம் திகதி அன்று தொல்லியல் திணைக்களத்தினால் அடையாளம் காணப்பட்டு 1986 எனும் பதிவு இலக்கத்தில் பிரகடனப்படுத்தப்பட்ட போதிலும் அவற்றினை பாதுகாப்பதற்கான எந்தவொரு செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இத்தகைய வரலாற்றுச் சின்னமாக அமையும் தேவாலயம் எத்தகைய கூரை அமைப்பினை பின்பற்றி இருப்பார்கள் என அறிய முடியாத அளவிற்குக் கூரைகள், ஜன்னல்கள், கதவுகள் இன்றியும் தற்போது காணப்படுகிறது.

மேலும், தேவாலய சுவர்களில் காதல் ஜோடிகள் தமது பெயர்களை எழுதி அவற்றினை சிதைவடையச் செய்வதாகவும் இளைஞர்கள் மறைந்திருந்து மது பாவனையினை மேற்கொள்ளும் இடமாகவும் தற்போது காணப்படுவதாகவும் அவ் ஊர் மக்கள் கூறியிருந்தார்கள். அத்துடன், தேவாலய சுவர்களும் ஆங்காங்கே வெடித்து உடைந்த நிலையிலும் குப்பைகளால் சூழப்பட்டும் காணப்படுகின்றது. உரிய முறையில் இவற்றினை பராமரிக்கப்படாத காரணத்தினால் இவை சிதைவடைந்து கொண்டு செல்கின்றன. அவ்வாறு இல்லாது ஏனைய வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களினை சிறப்பாகப் பராமரிப்பது போன்று இவற்றையும் பராமரித்தால் சுற்றுலா தளமாக மாற்றி அதனூடாக வருமானத்தையும் ஈட்டிக் கொள்ளக்கூடியதாக அமையும். அவை மட்டுமன்றி, இவ்வாறான வரலாற்றுச் சின்னங்களை அழியாது பாதுகாப்பது எமது அடுத்து வரும் தலைமுறையினருக்குக் கையளிக்க வேண்டியது எமது கடமையாகும்.





ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும்

# ஒரு பெண் கொல்லப் படுகிறாள்

**மகளிருக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினம் நவம்பர் 25ஆம் திகதியன்று அனுஷ்டிக்கப்படுகின்றது**



**"உலகெங்கிலும் உள்ள பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழிகளை ஆராய்வதற்கும், வன்முறையில் இருந்து தப்பியவர்களுக்கு அத்தியாவசிய ஆதரவை வழங்குவதற்கும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது**

மகளிருக்கு எதிரான வன்முறை ஒழிப்பிற்கான சர்வதேச தினம், திகதி, வரலாறு மற்றும் முக்கியத்துவம் என சிறப்பு நாள் பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம், நவம்பர் 25ஆம் திகதியன்று அனுசரிக்கப்படுகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறை என்பது உலகம் முழுவதும் நடந்து வரும் தொடர்ச்சியான பிரச்சினையாகும். குடும்ப வன்முறை அல்லது பாலியல் வன்முறை அல்லது கொலை என எதுவாக இருந்தாலும், உலகில் எல்லா இடங்களிலும் பெண்கள் பிரச்சினைகளையும் துஷ்பிரயோக பயத்தையும் எதிர்கொள்கின்றனர்.

ஆனால், உலகம் நகர்ந்து அனைத்து பாலினங்களுக்கும் பாதுகாப்பான இடத்தை உருவாக்குவதால், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் நிறுத்த நாம் ஒன்றிணைய வேண்டிய நேரம் இது.
கொவிட்-19 தொற்றுநோய் பெண்களுக்கு எதிரான வன்முறையைத் துரிதப்படுத்தியது என்றே கூறலாம். பெண்களால் நடக்கும் சில பணிகள் நடக்காமல் இடையூறு ஏற்பட்டதும் இந்த வன்முறை அதிகரித்தது.

வன்முறையைத் தடுக்க நாம் ஒன்றிணைவதற்கான நேரம் இது. பெண்களுக்கான வழிகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் கொண்டாடப்படுகிறது. இந்த நாளைக் கொண்டாட நாம் தயாராகி வரும் நிலையில், மனதில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் பற்றிப் பார்ப்போம்.

ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 25ஆம் திகதியன்று பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினம் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

1979ஆம் ஆண்டில், ஐ.நா. பொதுச் சபை பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான மாநாட்டை ஏற்றுக்கொண்டது. ஆனால், உலகம் முழுவதும் பெண்களுக்கு எதிரான வன்முறை இன்னும் பரவலாக நடந்துகொண்டு தான் இருக்கிறது.

சமத்துவம், மேம்பாடு, அமைதி மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளின் மனித உரிமைகளை நிறைவேற்றுவதற்குப் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்து தடையாக உள்ளது.
2008ஆம் ஆண்டில், பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளை முடிவுக்குக் கொண்டுவருவதில் பொது விழிப்புணர்வு மற்றும் கொள்கை வகுப்பதை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இது தொடர்பான பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.1981ஆம் ஆண்டு முதல், பெண் உரிமை ஆர்வலர்கள் நவம்பர் 25ஆம் திகதியைப் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை ஒழிப்பதற்கான சர்வதேச தினமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இருப்பினும், உலக அளவில் இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. இன்றுவரை, மூன்றில் இரண்டு நாடுகளில் மட்டுமே குடும்ப வன்முறை சட்டத்திற்குப் புறம்பாக உள்ளது.
அதே சமயம், உலகளவில் 37 நாடுகளில் பாலியல் பலாத்காரம் செய்பவர்கள் பாதிக்கப்பட்டவரைத் திருமணம் செய்து கொண்டால் அவர்களுக்குத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 49 நாடுகளில் தற்போது குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்கள் இல்லை.

இந்த 2024ஆம் ஆண்டுக்கான கருப்பொருள் என்பது ஒவ்வொரு 10 நிமிடங்களுக்கும் ஒரு பெண் கொல்லப்படுகிறாள் என்பதாகும். பெண்களுக்கு எதிரான வன்முறையை முடிவுக்குக் கொண்டுவர ஒன்றுபட்டுச் செயல்பட்டு, அதைச் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும். கருணை காட்டக் கூடாது என்பதுவே அவர்களுக்கான வழிகாட்டலாகும்.

உலகெங்கிலும் உள்ள பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், அதை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான வழிகளை ஆராய்வதற்கும், வன்முறையில் இருந்து தப்பியவர்களுக்கு அத்தியாவசிய ஆதரவை வழங்குவதற்கும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது.

(நன்றி: இணையம்)





சோமாலியா



அகதிகள் படகுகள் கவிழ்ந்ததில்

# 24 பேர் பலி

சோமாலியாவில் இருந்து ஐரோப்பாவுக்கு அகதிகளை ஏற்றிச் சென்ற 2 படகுகள் கவிழ்ந்ததில், 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

சோமாலியா நாட்டை சேர்ந்த பலர் பொருளாதார வாய்ப்புகளைத் தேடி ஐரோப்பாவுக்குள் நுழைய ஆபத்தான கடல்வழி பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில், சோமாலியாவைச் சேர்ந்த 70 பேர், ஞாயிற்றுக்கிழமை (24), 2 படகுகளில் இந்தியப் பெருங்கடல் வழியாக ஐரோப்பிய நாடுகளுக்குப் பயணத்தை மேற்கொண்டுள்ளனர். இதன்போது, 2 படகுகளும் விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் 24 பேர் உயிரிழந்தனர். அதேவேளை, விபத்தில் சிக்கிய 46 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

பிரித்தானியா

பிரித்தானியாவில்

## வெள்ள அபாய எச்சரிக்கை

பிரித்தானியாவில், 400 பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியாவை பெர்ட் புயல் தாக்கியுள்ள நிலையில், பல்வேறு பகுதிகள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், பிரித்தானியாவில், 400 பகுதிகளுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக, சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், ஸ்கொட்லாந்து, வேல்ஸின் மேற்கு பகுதிகள், தென்கிழக்கு பிரித்தானியா மற்றும் வடக்கு அயர்லாந்தில் பலத்த காற்றுடனான மழைவீழ்ச்சி பதிவாகக் கூடுமென எதிர்வு கூறப்பட்டுள்ளது.

பலத்த காற்று வீசுவதன் காரணமாக பல்வேறு பகுதிகளில் போக்குவரத்து சேவைகளுக்கு இடையூறு ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளதாக, அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

உத்தரபிரதேசம்



'கூகுள் மெப்'பை பயன்படுத்திய

## கார் விபத்து; மூவர் பலி

கூகுள் வழிகாட்டல் வரைபடத்தைப் பயன்படுத்தி பயணித்த கார் விபத்துக்குள்ளான சம்பவமொன்று, உத்தரப்பிரதேச மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

உத்தரப்பிரதேச மாநிலம், பரேலியில் இருந்து படாவுன் மாவட்டத்தில் உள்ள டேடாகஞ்ச் நோக்கி கார் ஒன்று சென்றுகொண்டிருந்தது. காரில் சகோதரர்கள் உட்பட 3 பேர் பயணித்தனர்.

கூகுள் மேப் உதவியுடன் கார் சென்றுகொண்டிருந்த போது,, அப்பகுதியில் வெள்ளத்தில் இடிந்து கேட்பாரற்று கிடந்த மேம்பாலத்தின் சென்ற கார், 50 அடியில் இருந்து கீழே ஓடும் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில், காரில் பயணம் செய்த மூவரும் உயிரிழந்தனர்.

கூகுள் மெப்பை நம்பி சென்றதால், இந்த விபத்து நடந்ததாக உயிரிழந்தவர்களின் உறவினர்கள் தெரிவித்தனர்.

அத்துடன், பாலம் முழுமையடையாமல் கிடப்பதால், வரும் வாகனங்களை எச்சரிக்கும் வகையில் அப்பகுதியில் தடுப்புகள் ஏதும் இல்லை என துறை அதிகாரிகள் மீது குற்றம்சாட்டினர்.

மகாராஷ்டிரா

## தேர்தல் வெற்றி கொண்டாட்டத்தில் தீ

மகாராஷ்டிரா சட்டப் பேரவை தேர்தலில் வென்ற சுயேச்சை வேட்பாளரின் வெற்றி விழா கொண்டாட்டத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் பலர் காயம் அடைந்தனர்.

மகாராஷ்டிரா - சந்த்கர் தொகுதியைச் சேர்ந்த பாஜக பிரமுகர் சிவாஜி பாட்டீல் என்பவர் போட்டியிட பாஜக வேட்புமனுவை வழங்கவில்லை. இதனால் இவர் இத்தொகுதியில் சுயேச்சையாகப் போட்டியிட்டார்.

தேர்தல் முடிவு, சனிக்கிழமை(23) வெளியானபோது சிவாஜி பாட்டீல் வெற்றி பெற்றார். இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட தேசியவாத காங்கிரஸ் வேட்பாளர் ராஜேஸ் பாட்டீலை விட 24,134 ஓட்டுகள் கூடுதலாகப் பெற்று வெற்றி பெற்றார்.

இந்த வெற்றியை அடுத்து அவரது ஆதரவாளர்கள் சனிக்கிழமை (23) வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். ஒரு பெண் சிவாஜி பாட்டீலுக்கு ஆரத்தி எடுத்தார். அப்போது கிரேன் ஒன்றில் இருந்து வண்ண பொடிகள் ஆதரவாளர்கள் மீது தூவப்பட்டன.

இதில் வண்ண பொடிகள் ஆரத்தி தட்டின் மீது விழுந்ததில் தீ சிதறி பரவியது. இதில் சிவாஜி பாட்டீல் உட்பட பல பெண்கள் தீக்காயம் அடைந்தனர்.




முதலாவது டெஸ்டில்

# அவுஸ்திரேலியாவை தோற்கடித்தது இந்தியா

அவுஸ்திரேலியாவுக்கெதிரான முதலாவது டெஸ்டில் இந்தியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரில், பேர்த்தில் வெள்ளிக்கிழமை (22) ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய நான்காம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 12 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா ஆரம்பத்திலேயே மொஹமட் சிராஜ்ஜிடம் உஸ்மான் கவாஜாவை இழந்தது.

பின்னர் ஸ்டீவன் ஸ்மித் ஒரு முனையில் நிற்க ட்ரெவிஸ் ஹெட் ஓட்டங்களைப் பெற்ற நிலையில், சிராஜ்ஜிடம் ஸ்மித் வீழ்ந்தார். அடுத்து வந்த மிற்செல் மார்ஷின் துணையில் ஹெட் தொடர்ந்தும் ஓட்டங்களைப் பெற்ற நிலையில் அணித்தலைவர் ஜஸ்பிரிட் பும்ராவிடம் 89 ஓட்டங்களுடன் ஹெட் வீழ்ந்தார். சிறிது நேரத்தில் நிதிஷ் குமார் ரெட்டியிடம் மார்ஷ் வீழ்ந்தார்.

இந்நிலையில், அலெக்ஸ் காரியும், மிற்செல் ஸ்டார்க்கும் நிலைத்து நின்ற நிலையில், வொஷிங்டன் சுந்தரின் ஒரே ஓவரில் ஸ்டார்க், அடுத்து வந்த நேதன் லையன் வீழ்ந்தனர். இறுதியாக ஹர்ஷித் ரானாவிடம் 36 ஓட்டங்களோடு காரியும் விழ சகல விக்கெட்டுகளையும் இழந்து, 238 ஓட்டங்களையே பெற்ற அவுஸ்திரேலியா 295 ஓட்டங்களால் தோற்றது.

இப்போட்டியின் நாயகனாக பும்ரா தெரிவானார்.



## ஐ.பி.எல். வரலாற்றின் விலையுயர்ந்த வீரராக பண்ட்

இந்தியன் பிறீமியர் லீக் (ஐ.பி.எல்) தொடரின் விலையுயர்ந்த வீரராக றிஷப் பண்ட் மாறியுள்ளார்.

சவுதி அரேபியாவின் ஜெடாவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றழ் 2025ஆம் ஆண்டுக்கான தொடருக்கான வீரர்கள் ஏலத்தின் முதல் நாளில் 27 கோடி இந்திய ரூபாய்களுக்கு பண்டை லக்னோ சுப்பர் ஜையன்ட் வாங்கியுள்ளது.

இதற்கடுத்ததாக 26.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு ஷ்ரேயாஸ் ஐயரை பஞ்சாப் கிங்ஸ் கைச்சாத்திட்டுள்ளது.

இதேவேளை, 23.75 கோடி இந்திய ரூபாய்களுக்கு வெங்கடேஷ் ஐயரை கொல்கத்தா நைட் றைடர்ஸ் மீளக் கைச்சாத்திட்டுள்ளது.

இதுதவிர, 18 கோடி இந்திய ரூபாய்களுக்கு அர்ஷ்டீப் சிங்கை பஞ்சாப் கிங்ஸ் மீளக் கைச்சாத்திட்டதுடன், யுஸ்வேந்திர சஹாலையும் 18 கோடி இந்திய ரூபாய்களுக்கு வாங்கியுள்ளது.



இத்தாலிய சீரி ஏ தொடர்:

## றோமாவை வென்ற நாப்போலி

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) நடைபெற்ற றோமாவுடனான போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் நாப்போலி வென்றது.

நாப்போலி சார்பாகப் பெறப்பட்ட கோலை றொமெலு லுகாக்கு பெற்றார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 26 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.